தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1971 ஜுன் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1952-ம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை தமிழ் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் நேற்றிரவு 11-30 மணிக்குக் காலமான செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, " 1952-ஆம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை தமிழ் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் தமது 81-ஆம் வயதில் இயற்கை எய்தியது கேட்டு இப் பேரவை வருந்துகிறது. அன்னாரது குடும்பத்திற்குத் தன் ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்ளுகிறது " என்று தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டு வரையிலும் இந்த மாநிலத்தினுடைய ஆளுநராக இருந்து, எல்லோருடைய நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்று, சிறந்த முறையில் ஆளுநராகப் பணியாற்றினர் என்பதை எல்லோரும் நன்கு அறிவோம்.

திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் நல்ல கல்வி அறிவு உடையவர்; நல்ல ஆழ்ந்த அறிவு படைத்தவர்; சிறந்த கல்வித் தன்மையை தம்முடன் செயலாற்றுகிறவர்களிடத்திலெல்லாம் காட்டுகின்ற நல்ல பாங்கு படைத்தவர்களாவார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த போது இளநிலையினராக இருந்து, இவரும் அங்கே படித்துத் தேறியவர்களாவார்கள். 1917-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரையிலும் தேசிய இயக்கத்திலே சார்ந்திருந்து அதனுடைய பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு, ஐந்து முறை சிறைக்குச் சென்ற பெருமையும் படைத்தவர்களாவார்கள்.

அதுமட்டுமல்ல. அவருடைய தந்தையார் பகவன்தாஸ் அவர்களே ஒரு பெரிய தத்துவ ஞானி என்று சொல்லப்படுகிற அளவுக்கு டாக்டர் பட்டமெல்லாம் பெற்றவர். அவருடைய குடும்பமே ஒரு நானூறு ஆண்டு காலமாகவே சிறந்த புகழும் பெருமையும் பெற்று விளங்கும் ஒன்றாகும். கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவுக்கு வந்து அவர்களுடைய வியாபாரத்தைத் தொடங்கிய அந்தக் காலத்திலிருந்தே காசி நகரத்தில் சிறந்த புகழ்பெற்ற ஒரு குடும்பமாக அவருடைய குடும்பம் இருந்து வந்திருக்கிறது. திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் சமுதாய முன்னேற்றத்திலும் சாதாரண—வீழ்ந்துகொண்டிருக்கும்—மக்கள் உயர்நிலை அடையவேண்டும் என்பதிலும் ஆர்வம் காட்டிப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். சென்னை மாநில ஆளுநராக மட்டுமல்லாமல், அதற்குப் பிறகு மராட்டிய மாநில ஆளுநராகவும் இருந்து பணியாற்றினார்கள். அவர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் தொடர்பு கொண்டவர்கள். பல்கலைக்கழகங்களினுடைய வளர்ச்சியிலே மிக அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் தியஸாபிகல் சொஸைட்டியில் உறுப்பினராக இருந்து அந்தக் கருத்துக்களிலே ஈடுபாடு கொண்டு, முற்போக்கான தன்மைகளில் தம்முடைய முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தவர்கள். டாக்டர் அன்னி பெஸன்ட்டோடு இணைந்து நின்று, அவர்கள் நடத்திய போராட்டங்களில் கூட ஈடுபாடு கொண்டு, அவரோடு பல பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அரசியல் வாழ்வும், சமுதாய வாழ்வும், கல்வித் துறை வாழ்வும் எல்லோராலும் பாராட்டத்தக்க அளவுக்கும் போற்றத்தக்க அளவுக்கும் அமைந்த ஒன்றாகும். அவர் 81-வது வயதில் இப்பொழுது இயற்கை எய்தினார் என்றாலும் கடைசி வரையில் அவர் சுறுசுறுப்பாகத்தான் இருந்து வந்தார்கள். பல்வேறு விளக்கக் கட்டுரைகளும்கூட பல பத்திரிக்கைகளில் அவ்வப்போது வெளியிட்டிருக்கிறார்கள். அரசியலைப்பற்றியும் பல கட்டுரைகள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் பொறுப்பை விட்டதற்குப்பிறகு, அதிலிருக்கும் சாதக பாதகங்கள், சங்கடங்கள் ஆகியவற்றையெல்லாம் உணர்ந்து அதிலே எத்தனை சிக்கல்கள் இருக்கின்றன, ஆளுநர் நிலைமைகளெல்லாம் எப்படி இருக்கவேண்டும் என்ற விளக்கங்களையெல்லாம் அவர் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். உள்ளத்தில் பட்டதை அப்படியே எடுத்து வெளியிடுவார். மற்றவர்கள் என்ன கருது வார்களோ என்று அஞ்சாமல் எடுத்துச் சொல்லும் சிறந்த பாங்கு படைத்தவர்களாவார். இப்படிப் பல்வேறு துறைகளில் பணியாற்றி, அரசியலிலும் புகழ்பெற்று, பெருமை பெற்றுச் சமுதாயத் தொண்டிலும் ஈடுபாடு கொண்டு எல்லோருடைய தன்மையையும் கருத்திற்கொண்டு, அன்போடும் பண்போடும் பழகிவந்த, சிறந்த ஆளுநராக விளங்கிய திரு. ஸ்ரீபிரகாசா அவர்களுடைய மறைவானது எல்லோருக்கும் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கும் ஒன்றாகும். அவருடைய பிரிவால் நாம்

1971 ஜூன் 24] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வருந்துகிறோம் என்பதை வெளிப்படுத்துவதன் மூலம், அவருடைய குடும்பத்திற்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் இந்த தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

* திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஆளுநராக இருந்து, இப்பொழுது மறைந்த உயர்திரு ஸ்ரீபிரகாசா அவர்களைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாமலிருந்தாலும், இந்திய தேசிய இயக்கத்தில் அதி தீவிரமாகப் பாடுபட்ட முன்னணித் தலைவர்களில் அன்னாரும் ஒரு பெரியார் என்று சொன்னால் அது மிகையாகாது. அதிலும் குறிப்பாக ஆளுநராக இருந்தபோதே மக்களோடு நல்ல முறையில் பழகி, நல்ல வெள்ளையுள்ளம் படைத்தவராகப் பணியாற்றினார்கள் என்று எல்லோரும் போற்றி புகழ்கிறார்கள். அன்னாருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு நஷ்டமாக இருக்கின்றது. அவருடைய மறைவுக்காக வருந்துகிற அவருடைய குடும்பத்தாருக்கு இந்த மன்ற உறுப்பினர்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். இம்மாதிரியான பெரியார் புகழோடு தோன்றிப் புகழோடு மறைந்திருக்கிறார். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர்கள் கடைப்பிடித்த நெறிகளை நாம் நல்ல முறையில் பின்பற்றவேண்டுமென்று கோரி, அன்னாருடைய ஆத்மா சாந்தி அடையவேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்த இரங்கல் தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரிக்கின்றேன். காலஞ்சென்ற திரு. ஸ்ரீபிரகாசா அவர்களுடைய தந்தையார் டாக்டர் பகவன்தாஸ் அவர்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் டாக்டர் அன்னிபெஸன்ட் இந்தியாவுக்கு வந்து இந்தியப் பிரஜையாகவே மாறி, இந்திய தேசீய இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள், தான் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளுவதில்லை. சமரசமாகவும் சமதர்மமுமான வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அவர்கள் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் மாணவர்கள் எல்லாம், மகாத்மா காந்திஜி அவர்கள் வேண்டுகோளின் பேரில் கல்லூரிகளை விட்டு வெளியே வந்தவுடனே, காசியில் ஆரம்பிக்கப்பட்ட 'வித்யா பீட்'டில் பேராசிரியராகப் பல ஆண்டுக் காலம் இருந்தார். யாரும் காசிக்குச் சென்றால் திரு. ஸ்ரீபிரகாசா அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கும் போதெல்லாம் அவருடைய அறிவாற்றல் மிக்க உரையாடலைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதுண்டு. அவர் ஐம்பதாண்டுக் காலமாகப் பொது வாழ்வில் நன்கு ஈடுபட்டிருந்தார் என்பது மட்டுமல்லாமல், சமதர்மக் கொள்கையை அக்காலக் காங்கிரசில் பரப்பிக் கொண்டிருந்த நரேந்திர தேவ், டாக்டர் அகமத்

போன்றவர்களோடு சேர்ந்து பல வெளியீடுகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கு கவர்னராக இருந்த காலம் ஒரு நெருக்கடியான காலம் ஆகும். அவர் நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அன்றைக்கிருந்த சூழ்நிலையின் காரணமாகப் பிரதம மந்திரி அவர்கள் அவரை இங்கே அனுப்பிவைத்தார்கள். அவர் கவர்னராக அமைந்தது ஒரு காண்ட்ரவர்ஸியாக இருந்தாலும்கூட, அவர் காலத்தில் எதிர்க் கட்சியினரையும் மற்றக் கட்சியினரையும் அழைத்து, எம்முறையில் ஒரு கவர்னர் நடக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தார். ஆகவே, இந்த அடிப்படையில் எங்களுடைய கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் அவை முன்னவர் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : அவைத் தலைவர் அவர்களே, மிக்க வேதனையோடு உயர்திரு ஸ்ரீபிரகாசா அவர்களுடைய மறைவு குறித்து என் கட்சியின் சார்பில் அனுதாபத்தோடு பங்குபெறுகிறேன். பழங்கால தேசியவாதிகளில் மிகச் சிறந்தவராகவும், பொதுநோக்கு உடையவராகவும், அரசியல்வாதியாகவும், தேசீய உணர்வு படைத்தவராகவும், கலைத்துறைப் பண்டிதராகவும், சிறந்த மேதையாகவும் கவர்னராகவும் அவர்கள் இந்த நாட்டுக்குச் சேவை செய்திருக்கிறார்கள்.

இந்த நாடு சுதந்திர உணர்வு அற்றிருந்த நேரத்தில் அன்னி பெசன்ட் அம்மையாருடன் தொடர்பு கொண்டு தீரமிக்க நெஞ்சோடு நாட்டு மக்களுக்கு தேசிய உணர்வு ஊட்டிய பெருமகனார் ஸ்ரீபிரகாசா அவர்கள். அந்தப் பெருமகன் பரந்த நோக்கு உடையவர்—எனது மரியாதைக்குரிய திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் அவரிடம் சமதர்ம நோக்கு இருந்தது. பொதுநோக்கு இருந்தது, மத உணர்வு இருந்தது—வெறி இருக்கவில்லை. அவருடைய காலத்தில் இங்கு தலை சிறந்த நல்ல பல பணிகள் நடந்திருக்கின்றன. நான் அப்போது இந்த அவையில் இல்லை என்றாலும் அப்போதைய நிகழ்ச்சிகள் எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றன. நாட்டில் கொதிப்பு எழுந்திருந்த நேரம் அது. பல கொதிப்புகள்—கொந்தளிப்புகளிடையே நாட்டை அமைதிப்படுத்தி செம்மையான முறையில் நிர்வாகத்தை இட்டுச் செல்வதில் அவர் காட்டிய திறமை பாராட்டத்தக்கது—பெருமைப் படத்தக்கது. மனிதாபிமான உணர்ச்சியோடு தேசிய ஒற்றுமையை தேசியக் கண்ணோட்டத்தோடு நிலைநிறுத்துவதில்—அப்போதடித்த புயலுக்கு நீர் ஊற்றிய பெருமகனார் அவர். அவருடைய மறைவு நாட்டுக்குப் பெரிய இழப்பாகும்—வருந்தத் தக்க அவருடைய மறைவு குறித்து பேரவையில் கொண்டு வரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தில் நானும் என் கட்சியின் சார்பில் பங்குகொண்டு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Mr. Speaker, Sir, while associating on behalf of the Swatantra Party with the sentiments expressed by the Hon. Leader of the House, I would like to state that we have lost a very great politician and today the void created by his demise, is something which is impossible to fill up. He hailed from an illustrious family. His father and his grand father and all those people had contributed greatly to the politics of India and also to the welfare of society and also in educational field. Such a great man we have lost and it is but natural that we are all assembled here today to express our deep sense of sorrow.

Mr. Sri Prakasa was one of those who always had a detachment for office. He was in office but at the same time when he was in office he was absolutely detached. It was something that was written in Bhagavath Gita; whatever he did, he did it for the pleasure of work and not with any intention of getting reward or return. That thorough detachmet is one that is rare in politicians. But Sri Prakasa was a great exception.

Another peculiarity about Sri Prakasa was this. He was invariably sent to troubled spots. I think the hon. Member Mrs. Jothi Venkatachallum remembers that when Sri Prakasa was sent to Madras State, as it was then called or when he was sent to Maharasthra, as it was called Bombay State then, he was sent to solve a particular serious problem and he did admirably well as far as he could do. Even during the term of governorship, he distinguished himself. It was during Rajaji's term of Chief Ministership that he was Governor and the two sailed along admirably well; just like our present Chief Minister and the Governor sail along well, they went along well. When he went for a number of places, Sri Prakasa actually propagated for the welfare of society and did good things. After his term, when he left Madras, I distinctly remember how sorry we were that he was leaving us.

But he went because he wanted to retire from politics. Usually Governors retired from politics. But Sri Prakasa was an exception. Even after retirement his mind was active and agile. He wrote a number of articles. In fact during the later period of his life he slowly and steadily felt depressed and desolate with the steady erosion of certain moral values among certain politicians. He expressed it so clearly in clear terms that he felt sorry that many politicians of today were not so much interested in moral values and that they were trying to bring down those values. It was such a great man that we find we have missed a man who has disillusioned philosopher and educationist and a great and clean politician. On behalf of the Swatantra Party I wish to associate myself with the sentiments so admirably placed before the House by the Hon. Leader of the House.

*** திரு. எம். சுரேந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் வைக்கப்பட்டிருக்கிற அனுதாபத் தீர்மானத்தின் உணர்வுகளில் நானும் எனது கட்சியும் முழுமனதாகப் பங்குகொள்கிறோம். ஸ்ரீபிரகாசா அவர்கள் பற்றி மற்ற

எல்லோரும் கருதுவதைவிட நானும், என்னுடைய கட்சியினரும் அவரைப்பற்றி அதிகமாகக் கருதுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் எங்கள் கட்சி 1934-இல் கட்சி ஆரம்பிக்கப் படுகின்றபோது அதற்கு மிக உறுதுணையாகவும், மிக்க ஒத்தாசையாகவும், மிக்க வலிமையான கட்சியின் தூணாகவும் அவர்கள் இருந்தார்கள் என்பதை பலபேரும் தெரிந்திருக்க மாட்டார்கள். பிற்காலத்திலும் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் ஆதரவாளராகவும் இருந்தார்கள் என்பதற்கு நரேந்திரதேவ் அவர்கள் பெருந்துறை ஆஸ்பத்திரியில் நோயாளியாகப் படுத்திருந்தபோது முழுக்க முழுக்க ஆதரவு அளிப்பதில் அவர்கள் பங்கு கொண்டார்கள் என்பதை நாங்கள் நினைக்காமல் இருக்க முடியாது. அவர்களுடைய அறிவாற்றல் எல்லோராலும் பாராட்டப்பெறுகிறது. எப்படி எல்லாம் எந்தக் கோணத்துடன் பார்த்தாலும் அவர்களுடைய மறைவு நாட்டுக்குப் பெரு நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. அவர் மறைவு குறித்து அவை முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து, எங்களுடைய கட்சியின் சார்பிலும் வணக்கத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஸ்ரீபிரகாச அவர்கள் மறைவு குறித்து அவையில் கொண்டுவரப்பட்டிருக்கிற இரங்கல் தீர்மானத்தை நானும் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ஆமோதிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும் தத்துவவாதியினுடைய சிறந்த செல்வனாகப் பிறந்து, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய விடுதலை வரலாற்றில் தன் பெயரையும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க அளவுக்கு விடுதலை வீரனாக வாழ்க்கையை வளர்த்துக் கொண்டு நல்ல அறிவுச் சிந்தனை உடையவராகவும், பேரறிவாளியாகவும், நிர்வாகியாகவும் நேர்மையாளராகவும் வாழ்ந்து காட்டிய பெருமகனார் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் மறைந்துவிட்ட செய்தி உள்ளபடியே இந்திய பூபாகத்தில் உள்ள அனைவருடைய உள்ளத்திலும் பேரதிர்ச்சியைத் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1952-ஆம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டுவரை ஆளுநராக அவர்கள் பொறுப் பேற்றிருந்தார்கள். அந்த நேரத்தில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பெரும் போராட்டங்களில் அது ஈடுபட்டிருந்த நேரம். அந்த நேரத்தில் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் தமிழகத்தினுடைய ஆளுநர் பொறுப்பை ஏற்று இருந்தார்கள்.

அவர்களுடைய வாழ்க்கை அன்னிபெசண்ட் அம்மையாருடைய ஹோம் ரூல் இயக்கத்தோடு அரசியலில் பிணைக்கப்பட்டு, அதற்குப் பிறகு அவர்கள் இந்தியாவினுடைய விடுதலையைக் காணுகின்ற நல்ல பேற்றினைப் பெற்று மாநிலத்தின் கவர்னராகவும், இன்னும்

சொல்லப் போனால் பாகிஸ்தானில் இந்தியாவின் முதல் ஹைகமிஷனராகவும் பொறுப்பேற்றிருந்து, அதன் பின்னர்தான் தமிழக மாநிலத்தின் ஆளுநராக இருந்து, 1956-ஆம் ஆண்டில் இருந்து 1962 வரை மராட்டிய மாநிலத்தின் ஆளுநராகவும் பொறுப்பேற்று இருந்து தம்முடைய கடமைகளைச் செவ்வனே ஆற்றிவந்தவர்கள் ஆவார்கள்.

திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் கலை உள்ளம் படைத்தவர்கள். நல்ல கட்டுரை எழுதும் திறன் வாய்ந்தவர்கள். கருத்துக்களை மிகத் தெளிவாகக் கட்டுரை வடிவிலே வடித்துத் தந்து அவை ஏடுகளிலே வந்ததைக் கண்டு, அவருடைய சிந்தனையோட்டத்தைப் பலமுறை பாராட்டியிருக்கிறோம். மத்திய அரசு அமைப்பு, மாநில அரசுகள் அமைப்பு இவைபற்றியெல்லாம் அவர் புதிய சிந்தனைகளைச் செய்தார். மொழிப் பிரச்சினையில் அவர் புதிய கண்ணோட்டத்தை இந்திய மக்கள் பெற வேண்டுமென்று அரிய ஆலோசனைகளையெல்லாம் தந்தார். அப்படிப்பட்ட நல்ல பண்பாளர், வித்தகர், இன்றையதினம் இயற்கையால் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டது நாட்டிற்கு ஏற்பட்ட பெரியதோர் இழப்பாகும். அவருடைய பிரிவை எண்ணி வருந்துகின்ற நேரத்தில் இந்த மாமன்றத்தின் சார்பில் அவையின் முன்னவரும், கல்வியமைச்சருமான நாவலர் அவர்கள் முன்மொழிந்துள்ள இரங்கல் தீர்மானத்தை நானும் வழிமொழிந்து, மறைந்த அன்னாருடைய குடும்பத்தாருக்கு தமிழகத்தின் சார்பில் ஆழ்ந்த, இதயமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவையின் முன்னவரும், மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், மறைந்த பெரியாருக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைக்கார்கள் கட்டண உயர்வு

*1 குறுகிய கால வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—